செய்தி வெளியீடு எண்:132 நாள்:30.09.2019

# பத்திரிக்கைச் செய்தி

மருத்துவப் பணியாளர் தேர்வு வாரிய உறுப்பினர் செயலர், சென்னை-6 அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள 1234 **"கிராம சுகாதார செவிலியர்"** பணிக்காலியிடங்களுக்குத் தகுதிவாய்ந்த **பெண் பதிவுதாரர்கள் மட்டும்** மாநில அளவிலான உத்தேச பதிவுமூப்புப்படி வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் பரிந்துரைக்கப்பட உள்ளனர். எனவே, கீழ்கண்ட கல்வித்தகுதியும் வயது வரம்பிற்குட்பட்டும் பதிவுசெய்த தகுதிவாய்ந்த பதிவுதாரர்கள் அவர்களது அனைத்து அசல் கல்விச்சான்றுகள், முன்னுரிமைப் பதிவு தொடர்பான சான்று, சாதிச்சான்று, இணையதள வழி பதிவிறக்கம் செய்யப்பட்ட (ONLINE) வேலைவாய்ப்பு அலுவலக பதிவு அடையாள அட்டை ஆகியவற்றுடன் சென்னை**-4 சாந்தோம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் அலுவலகத்திற்கு 04.10.2019-க்குள் மாலை 03.00மணிக்குள் அலுவலக வேலை நாட்களில்** நேரில் ஆஜராகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். **இக்குறிப்பிட்ட தேதிக்குப்பின்னர் பெறப்படும் பரிந்துரைத்தல் தொடர்பான கோரிக்கைகள் எதுவும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது** எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**கல்வித்தகுதி:**

மேற்படி கிராம சுகாதார செவிலியருக்கான பயிற்சியை அரசு பயிற்சி நிறுவனங்கள் மூலமாகவோ அல்லது இந்தியன் நர்சிங் கவுன்சிலால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களிலோ பயின்று தேர்ச்சிபெற்று பதிவு செய்த பதிவுதாரர்கள் மட்டுமே தகுதியானவர்களாக கருதப்படுவார்கள்.

பத்தாம் வகுப்பு தேர்ச்சியுடன் பொதுசுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு இயக்குநர், அவர்களால் வழங்கப்பட்ட 18 மாதகால பல்நோக்கு சுகாதார பணியாளர் பயிற்சியில் தேர்ச்சிபெற்றவர்கள் அல்லது பனிரெண்டாம் வகுப்பு தேர்ச்சியுடன் இரண்டாண்டுகளுக்கான AUXILIARY NURSE MIDWIFE அல்லது பல்நோக்கு சுகாதார பணியாளருக்கான பயிற்சியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும் தமிழ்நாடு செவிலியர் மற்றும் பேறுகால மருத்துவப்பணிக்கான கவுன்சிலில் பதிவு செய்திருத்தல் வேண்டும். **தமிழ்நாடு செவிலியர் மற்றும் பேறுகால மருத்துவப்பணிக்கான கவுன்சிலில் பதிவு செய்யாத மனுதாரர்கள் பரிந்துரைத்தலுக்கு கருதப்படமாட்டார்கள்.**

**வயது வரம்பு:**

01.07.2019 அன்றைய நிலவரப்படி முற்பட்ட வகுப்பினர் தவிர இதர அனைத்து வகுப்பினரும் 57 வயதிற்குள் இருக்க வேண்டும். முற்பட்ட வகுப்பினர் 40 வயதிற்குள் இருக்க வேண்டும்.

இது தொடர்பான மேலும் விபரங்களுக்கு சென்னை-4 சாந்தோம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம், துணை இயக்குநர் அவர்களை நேரில் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.**

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை-01